# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று புதுக்கோட்டை, திருப்பத்தூரில் உரையாற்றுகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், நான்காம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 10-ஆம் தேதி தஞ்சாவூரில் தொடங்கினார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று புதுக்கோட்டை, திருப்பத்தூரில் உரையாற்றுகிறார்!**



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **11.04.2026 (சனிக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | புதுக்கோட்டை (பொதுக்கூட்டம்) | கந்தர்வக்கோட்டை, விராலிமலை, புதுக்கோட்டை, திருமயம், ஆலங்குடி, அறந்தாங்கி |
| மாலை 7 மணி | திருப்பத்தூர் (பொதுக்கூட்டம்) | காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, மானாமதுரை |
| **12.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | பரமக்குடி (பொதுக்கூட்டம்) | பரமக்குடி, திருவாடானை, ராமநாதபுரம், முதுகுளத்தூர் |
| மாலை 7 மணி | தூத்துக்குடி (பொதுக்கூட்டம்) | விளாத்திகுளம், தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி |

குறிப்பு:

❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 08.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### திண்டுக்கல் மாவட்டம் - ஆத்தூரில் தேர்தல் பரப்புரை!

# எல்லாருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என முதல்வர் கவனமுடன் செயல்படுகிறார்!

### அமைச்சர் - வேட்பாளர் ஐ. பெரியசாமி பேச்சு



திண்டுக்கல், ஏப்.11-

ஆத்தூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான இ.பெரியசாமி ரெட்டியார்சத்திரத்திற்குட்பட்ட நீல மலைக்கோட்டை, புதுச்சத்திரம், பழக்கனுத்து, முருநெல்லிக்கோட்டை, நடுப்பட்டி குருநாதர்நாயக்கனூர் மற்றும் சின்னாளப்பட்டி பேரூராட்சி உள்ளிட்ட பகுதிகளில்தீவிர வாக்குசேகரிப்பில் ஈடு பட்டார்.

அப்போது பொதுமக்கள் மத்தியில் அவர் பேசியதாவது:

100 நாள் வேலை திட்டத்தில் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு கொடுக்கும் நிதியை சரிவர கொடுக்காமல் இழுத்து அடித்து வருகிறது. தினமும் எங்களிடம் அனுமதி பெற்று 100 நாள் வேலைக்கு வர வேண்டும் என்ற அளவில் கொண்டு வருகிறார்கள். தமிழக அரசு இருக் கும்போது இவர்களிடம் எதற்கு அனுமதி பெற வேண்டும். தமிழர்கள் கட்டும் ஜி.எஸ்.டி.யில் நமக்கு சேர வேண்டிய பங்கை பிரித்து தராமல் குஜராத், அசாம், மத்திய பிரதேச மாநிலங்க ளுக்கு சிறப்பு நிதி என கொடுக்கிறார்கள். அவர்கள் யாரும் ஜி.எஸ்.டி., கட்டுவது கிடையாது.

தேர்தல் முடிந்த பின்பு ஒன்றிய அரசு 100 நாள் வேலைக்கு பணம் கொடுத்தாலும், கொடுக்கவில்லை என்றாலும், நமது முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைவருக்கும் 100 நாள் வேலை கொடுப்பார்கள். அதற்கான சம்பளமும் கொடுக்கப்படும். எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்பட்டு வருகிறார். வருகிற சட்ட மன்றத்தேர்தலில் 200 க்கும் மேற்பட்ட இடங்களில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும். நமது ஆத்தூர் தொகுதியில் குறைகள் இருந்தால் நேரில் வந்து கூறுங்கள். தேர்தல் முடிந்த பின்பு அனைத்தும் பூர்த்தி செய்யப்படும்.

நீலமலைக்கோட்டைக்கு காவிரி தண்ணீர் வருவதற்கு அனைத்து ஏற்பாடுகளும்

செய்யப் பட்டு தேவையான அளவு தண்ணீர் வருகிறது. இந்த பகுதிக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. நான், அமைச்சர் .சக்கரபாணி, காந்திராஜன், இ.பெ.செந்தில் குமார் ஆகிய 4 பேரும் முதல்அமைச்சரிடம் மனு கொடுத்தோம். நீங்கள் ஏன் மனு கொடுக்கிறீர்கள் என்று முதல்அமைச்சர் கேட்டார். அதற்கு வைகை அணையில் இருந்து எங்கள் பகுதிக்கு தண்ணீர் கொடுத்து உதவுங்கள் என்று கேட்டோம். திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும் நிரம்புவதற்கு உதவி செய்யுங்கள் என்று கூறினோம். வைகை அணையின் உள்பகுதியில் இருந்து நமக்கு தண்ணீர் வருவதற்கு உடனடியாக அனுமதி அளித்து, அதிகாரிகளிடம் கூறி திட்ட அறிக்கை தயாரிக் கும்படியும், உடனடியாக சுமார் ரூ.800 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தேர்தல் முடிந்தவுடன் அதற்கான வேலைகள் தொடங்க உள்ளன. தேர்தல் முடிந்தவுடன் 1.31 கோடி மகளிருக்கு அவரவரார் வங்கி கணக்கில் தலா ரூ.2 ஆயிரம் வரவு வைக்கப்படும். இல்லத்தரசிகளுக்கு வீட்டு உபயோக பொருட்கள் வாங்க ரூ.8 ஆயிரம் கூப்பன் கொடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதில், திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்யமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் ப.க.சிவகுருசாமி, மணி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ராஜேஷ் பெருமாள், கட்சி பொறுப்பாளர்கள் விவேகானந்தன், ஹரி, சுபாஷ், கபிலன், அருண் பன்றி மலை ஜெகநாதன், ஸ்ரீராமபுரம் பேரூராட்சி தலைவர் ஷகிலா ராஜா, துணைத்தலைவர் முருகேசன், அகரம் பேரூராட்சி தலைவர் மணி, முன்னாள் ஊராட்சி தலைவர்கள் சுவாமிநாதன், மெர்சி என்கிற லெட்சுமி, சின்னு என்கிற முருகன், காங்கிரஸ் வட்டார தலைவர்கள் முருகானந்தம், முருகேசன், முன்னாள் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்கள் சுமதி, ரமேஷ், மலைச் சாமி, கொம்பன் என்கிற பாலசுப்பிரமணி, மாவட்ட பிரதிநிதி ராமகிருஷ்ணன், கட்சி நிர் வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கொள்கை கூட்டணியாக தமிழ்நாட்டில் நிலைத்து நிற்கிற தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியின் வெல்லும் வேட்பாளராக கழக தலைவர் அவர்களால் இரண்டாவது முறையாக களம் காணும் மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா முத்து ராமலிங்கம் இராமநாதபுரம் நகராட்சி பகுதியில் உள்ள சாலையோர வியா பாரிகள், பெரும் நிறுவனங்கள் நகை கடை வியாபாரிகள் என அனைத்துத் தரப்பு மக்களிடமும் நேரடியாக சந்தித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றியை தேடி தர வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் நகர் கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் மதச்சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாக பெருமக்கள் அனைவருக்கும் கலந்து கொண்டனர். திராவிட மாடல் ஆட்சியில் அனைத்து தரப்பு வியாபார மக்கள் வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றி தந்த நம் கழக தலைவர் தான் மீண்டும் முதலமைச்சராக வருவார் என உறுதி அளித்தனர்.



மதுரை திருப்பரங்குன்றம் தொகுதி கழக வேட்பாளர் கிருத்திகா தங்க பாண்டியன் தொகுதிக்குட்பட்ட கூத்தியார் கொண்டு பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் கழக நிர்வாகிகள் ஏர்போர்ட் பாண்டியன், சிவகாசி வனராஜா, உசிலை சிவா, வேட்டையன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.